


26.05.2025

## 21. பரிசுத்த அக்கினியா? பாவத்தின் குளிர்ச்சியா?

“**ப**ரிசுத்த அக்கினி” அது ஒன்றே, இன்று நம்முடைய தேவை! நம்முடைய ஆலய பலிபீடங்களில், பாவிகளை உணர்த்தி மனந்திரும்பச் செய்யும் பரிசுத்தாவியின் வல்லமை எங்கே? இன்றுள்ள சபைகள் ‘குளிர்சாதனம் கொண்டு’ குளிர்ச்சி குதூகலம் தேடுகிறார்கள்! இதுவா நமது நாட்டம்? “அக்கினிமயமான ஜெபத்தின் ஜெயமல்லவோ, சபையின் ஆர்வமாய் இருந்திருக்க வேண்டும்!”. நம் தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார். தேவனையும் அக்கினியையும் ஒருபோதும் பிரிக்க இயலாது. எல்லா மனிதர்களுக்கும் ‘அக்கினி’ உண்டு. பாவிகளாய் தொடர்ந்து ஜீவிப்பவர்களுக்கு நரக அக்கினி உண்டு! விசுவாசிகளின் கூட்டத்திற்கு நியாயத்தீர்ப்பின் அக்கினி உண்டு! ஆனால், இன்று சபை பரிசுத்தாவியின் அக்கினியை இழந்தபடியால், திரள் கூட்ட விசுவாசிகள் ‘பின்மாற்றத்தில்’ நரக அக்கினிக்கே திருப்பி அனுப்பப்படுகிறார்கள்!

**– ரத்னம்**